சென்ற இதழின் தொடர்ச்சி ......

*7.* நாசிசவாதிகள், திட்டமிட்டு யூத இனத்தின் புத்திஜீவிகள் பலர் கொலை செய்யப்பட்டும், கடத்தப்பட்டும், காணாமற் போதல் செய்தும் யூத இனத்திற்கெதிரான இன அழிப்பு வேலையைச் செய்தனர். 1939 க்கும் அதற்குப் பிறகும் எண்ணற்ற புத்திஜீவிகள் கொல்லப்பட்டதைச் சிறந்த எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். அதுபோன்றே இலங் கையில், சிங்களர்கள் 1983 முதல் தமிழினத்தின் புத்தி

*10.* நாசிகள் அரசாங்கம் யூத மக்களை அன்றாட வாழ்வில் பட்டினி போடல் மற்றும் உணவு, மருந்து குறைப்பினால் இனத்தையே மெல்ல மெல்ல அழித்தொழித்தனர். அது போன்றே, இலங்கையில், சிங்களர்களால், 1991 ஒகஸ்ட் மாதம் கொண்டுவரப்பட்ட அவசரகாலச் சட்டத்தின்கீழ், வடக்கு - கிழக்கு மாகாணத் தமிழ் மக்களுக்கு உயிர் காக்கும் மருந்துகள் உட்பட பல பொருட்கள் தடை செய்யப்பட்டன.

(1). அறுவைச் சிகிச்சைக் கருவிகள், உயிர்காக்கும் மருந்து

சியை அழித்தது குறிப்பிடத்தக்கது.

(4). மீன்பிடித் தடைச் சட்டங்கள் தமிழ் மீனவர்களின் வாழ்க்கையைப் பெரும் கேள்விக்குறியாக்கியது.

(5). 1990 முதல் தமிழ் அகதிகளைத் தடுப்பு முகாம்களில் 20 ஆண்டுகளுக்கு மேல் வைத்திருப்பதன் மூலம் தமிழர் களின் எதிர்காலத்தையும், பொருளாதார வளர்ச்சியையும், சிங்களர்கள் நாசப்படுத்தினர்.

(6). பல வருடங்களாக தொடர்ச்சியாக சிங்கள வதையினால் அவதியுற்று வரும் தமிழ் மக்களுக்குத் தொண்டு நிறுவனங்

# ஈழத்தமிழர் மீதான இனஅழிப்புத் திட்டத்தை நிறுத்துவது யார்?

# ஐ.நா.வா? மீண்டும் தமிழர்களின் ஆயுதப் போராட்டமா?

ஜீவிகளைக் கொலை செய்ததோடு, அதன் பின்பும் அதிவேக விசையில் மேற்கொண்டனர். (எ.டு): 2004-2006 யாழ் பகுதியிலும், கிழக்கு மாகாணத்தில் சமூகத் தலை வர்கள் கொல்லப்பட்டனர். மாணவர்கள் கொல்லப்பட்டனர். ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர். இலங்கை முழுவ திலும்: தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் 4 பேர் கொல்லப்பட்டனர். கிழக்கு மாகாண பல்கலைக்கழகத் துணைவேந்தர் மற்றும் மாணவர் தலைவர்கள் மற்றும் தொண்டு நிறுவன ஊழியர்கள் பலர் கொல்லப்பட்டனர். ஊடகப் பணியாளர்கள் கொல்லப்பட் டனர். கொழும்பில் தமிழினத்தைச் சேர்ந்த பல அரசியல் வாதிகள் கொல்லப்பட்டனர். வணிக நிறுவன உரிமையாளர் கள் கடத்தப்பட்டனர், கொல்லப்பட்டனர். இப்படியாக எண்ணற்ற சம்பவங்களை உற்று நோக்கினால், சிங்களர் களாலும், அவர்களது அரசாங்கங்களினாலும் திட்டமிட்ட முறையில் தமிழின அழிப்பு வேலை நடந்துவருவதை புரிந்து கொள்ளலாம்.

*8.* நாசிசவாதிகள் யூத சனத்தொகையை திட்டமிட்டுக் குறைத்தனர். அதுபோன்றே, இலங்கையில், இராணுவ கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் தமிழ்ப் பிரதேசங்களில்

(1) ஒரு நாளில் 3-க்கும் மேற்பட்ட தமிழர் காணாமல் போதல் மூலம் படிப்படியான ஆட்குறைப்பு (சில ஆண்டுகளில் ஒரு நாளைக்கு 6 வீதம்) செய்ததை எடுத்துக்கொள்ளலாம்.

(2). போர் நிறுத்த உடன்படிக்கை நடைமுறையில் இருக்கும் போதும், சிங்களர்களால், திட்டமிட்டு தமிழ் வணிகர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலர் கொல்லப்பட்டதையும் நினைவிற்கொள்ளலாம்.

(3). குறிப்பாக இராணுவத்தில் சேரத் தகுதிபடைத்த ஆண் களும், மற்றும் சமூகத் தலைவர்களும் கொல்லப்பட்டதை நினைவிற் கொள்ளலாம்

(4). உலகிலேயே காணாமல் போகச் செய்தலில், இலங்கை அதிக விகிதாச்சாரத்தைப் பெற்று உள்ளதை பார்த் தோமானால் அதிர்ச்சி கலந்த உண்மையை புரிந்து கொள்ளலாம்.

*9.* நாசிகள் யூத இனத்தின மக்கள் குறைப்பைத் திட்டமிட்டு மேற்கொண்டனர். யுத இனக் குழந்தைகளின் வாழ்நாள் நீடிப்பைத் திட்டமிட்டுக் குறைத்தனர். யூத சந்ததியினர் விருத்தியை மருத்துவ ரீதியில் தடுத்தனர். அப்படியாக இலங் கையில் சிங்களர்கள் தமிழினத்தின் மக்கள் குறைப்பை திட்டமிட்டு மேற்கொண்டனர். யாழ்ப்பாணம், வன்னியில் தமிழினக் குழந்தைகளிடையே உருவான சத்துணவின்மை, நோய் ஆகியவற்றை சிங்கள அரசு அலட்சியப்படுத்தியது மட்டுமன்றி, வேண்டுமென்றே, கண்டும் காணாதது போல் எண்ணற்றக் குழந்தைகள் மடிந்ததை நினைவிற் கொள் ளலாம். தமிழர்களின் குடும்பத்திலுள்ள கணவன் - மனை வியைப் பிரித்து வெவ்வேறு தடுப்பு முகாம்களில் வைத்தி ருத்தல் மூலம் சந்ததி இன விருத்தியைக் கட்டுப்படுத்தினர். சிங்களர்களால், தமிழினப் பெண்களின் மேல் மேற்கொள் ளப்பட்ட கூட்டுப் பாலியல் வதை மூலம் பெண்களின் மகப்பேற்றைத் தடுத்தனர். பெண்களுக்கு எதிராக வன் முறை மேற்கொள்வதில் உலகின் முதல் மூன்று நாடு களுக்குள்ளான பட்டியலில் இலங்கை உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

வச் சாதனங்கள், வலி நிவாரணிகள், கட்டுத் துணிகள் மற்றும் சிறு காயங்களுக்குப் பயன்படுத்தும் மருந்துகள் தடை செய்யப்பட்டது

(2). 1992 நவம்பரில் யாழ்ப்பாண மாகாண மருத்துவ இயக்கு நரின் வேண்டுகோளில் ஒரு சிறுபகுதியை மட்டுமே அனு மதித்தது போன்றவை தமிழ் மக்களுக்கு சிங்களர்கள் மருத்துவ உதவிகள் கிடைக்காதவாறு திட்டமிட்டு பார்த்துக் கொண்டனர். கீழ்கண்ட குறிப்புகளை நோக்கினால் அது சிறந்த எடுத்துக்காட்டுகளாக அமையும். (i) 5,35,000 ஹமாக் சனின் மாத்திரைகள் கேட்ட இடத்தில் 2000 மும், 19,70,000 பென்சிலின் மாத்திரைகள் கேட்டதற்கு 5,85,000 மட்டுமே தரப்பட்டன. (ii) யாழ்ப்பாணப் பிரதேசத்திற்கு உயிர்க் காற்று உருளை (oxygen cylinder) ஒன்று கூட கொடுக்கப் படவில்லை. (iii) மருந்துகள் இன்மையால் மருத்துவமனை களிலும், அகதி முகாம்களிலும் பல குழந்தைகள் குடல் காய்ச்சலாலும், வாந்தி பேதியாலும் மடிந்தனர். (iv) மன்னாரிலும் மட்டக்களப்பிலும் மலேரியாவால் மடிந்தனர். (v) மலேரியாவைப் பரப்பும் கொசுக்களைக் கட்டுப்படுத்த உதவும் மாலத்தியன் மருந்து கொடுக்க மறுத்ததால் 77.540 மக்கள் மலேரியா காய்ச்சலால் பாதிக்கப்பட்டனர். இந்த எண்ணிக்கை இனப்படுகொலையால் பாதிக்கப்படாத பிற இடங்களைக் காட்டிலும் பல மடங்கு கூடுதலானதாகும் என்பன.

(3). அதுமட்டுமன்றி, 2009-ல் நடைபெற்ற 4-ஆம் கட்ட ஈழப் போரில் வன்னியில் மருந்தும், உணவும் தடைப்பட்டதால் பலமக்கள் இறந்தனர். குண்டுகளினால் காயப்பட்ட நோயா ளிகளில் பலர் தொற்று நோயைத் தடுக்கும் மருந்துகள் இல்லாமையால், பாதிக்கப்பட்ட உறுப்புகளை அகற்றும் அறுவைச் சிகிச்சைகள் பலமுறை மேற்கொள்ள வேண்டியி ருந்தது என்பதான அதிர்ச்சியான உண்மைகள் யூத இனத்திற்கு இணையான, தமிழின அழிப்பை உறுதி செய்கின்றன.

*11.* நாசிகளின் அரசாங்கம், யூதமக்களின் மதகுருக்களைக் கொன்று, அவர்களின் சமய வழிபாட்டு உரிமைகளைத் திட்டமிட்டுப் பாதித்ததை உற்றுநோக்கில், அவ்வாறே இலங்கையில், சிங்கள அரசாங்கம், தமிழர்களின் இந்து சமய வழிபாட்டு உரிமைகளைப் பாதித்ததோடு மட்டுமன்றி, பல வட - கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழ்பேசும் தேவாலய மதகுருக்களைக் கொன்று தமிழ் கிறித்துவ மக்களின் சமய வழிபாட்டு உரிமைகளையும் அச்சுறுத்து தலுக்கு உள்ளாக்கினர்.

*12.* நாசிகள் யூத மக்களின் தொழிலதிபர்களைக் கொன்றும், அவர்களின் நிறுவனங்களை அழித்தும் பெரும் பொருளா தாரச் சீர்கேட்டை யூத இனத்திற்கு உருவாக்கினர். இலங் கையிலும், சிங்களர்கள், தமிழினத்திற்கு, பல வழிகளால் பொருளாதாரச் சீர்க்கேடுகளை உருவாக்கினர். முறையே,

(1). 1948, 1949 குடியுரிமைச் சட்டத்தின் மூலம் இந்திய தமிழ் மக்களின் பொருளாதாரக் கட்டமைப்புகள் சிதைக்கப்பட்டன.

(2). 1983 இனக்கலவரம் மூலம் பெரும்பான்மையான தமிழ் வணிக நிறுவனங்களைக் கொழும்பில் அழித்தனர்.

(3). 1990 முதல் இந்நாள் வரை, பொருளாதாரத் தடையால், யாழ்ப்பாணத்திலும், வன்னியிலும் பொருளாதார வளர்ச்

- பேராசிரியர் தீரன் -

களையும் சேவை செய்யவிடாமல் அவர்களை வெளியேற் றியதுடன், அதன் ஊழியர்கள் பலரையும் சிங்களர்கள் கொன்றனர்.

(7). தொடர்ந்து 30 வருடங்களுக்கு மேலாக நடந்த ஊரடங் குச் சட்டத்தினால், ஏற்பட்ட பாதிப்பு போன்ற மேற்கண்ட சிங்களர்களின் கொடுமைகளை நோக்கினால், இது சிங்க ளர்களாலும், சிங்கள அரசாங்கத்தினாலும் திட்டமிட்ட தமிழர்களுக்கெதிரான இன அழிப்பு என்பதை உறுதிபடுத்தும்

*13.* நாசிகள் 1939 முதல் போலந்து யூதர்களைச் சித்திவதை முகாம்களுக்குள் அடைத்து யூத மக்களுக்கெதிரான இன அழிப்பை உச்சத்திற்கு எடுத்து வந்தனர். அப்படியாகவே, இலங்கையிலும், சித்திரவதை முகாம்கள் தமிழர்களுக் கெதிராக உருவாக்கப்பட்டன. 1983 முதல் 1995 வரையில் சிங்கள அரசாங்கம் மேற்கொண்ட தமிழினத்திற்கெதிரான இராணுவ நடவடிக்கையினால், வடக்கு - கிழக்கு மாகா ணங்களில் மாத்திரம் உலகெங்கிலும் இல்லாத அளவிற்கு, 12,24,000 தமிழர்கள் இடம் பெயர்ந்தனர். அவற்றுள் 98,000 போர்கள் வதைமுகாம்களில் 18 ஆண்டுகளுக்கு மேலாக அடைத்து வைக்கப்பட்டனர். 1990 யூன்-ல் நடைபெற்ற 2வது கட்ட ஈழப்போரின் போது 3,50,000 தமிழர்கள் யாழ்ப்பாணத்திற்கு இடம் பெயர்ந்தனர். அத்துடன் 1,20,000 பேர்கள் தமிழ்நாட்டிற்கு அகதிகளாகத் தஞ்சம் புகுந்தமையால், அங்குள்ள அகதிகள் எண்ணிக்கை 2,30,000 ஆக உயர்ந்தது. 2009-ல் வன்னியி லிருந்து இடம்பெயர்ந்த அகதிகளுக்குப் புதிய வதை முகாம்கள் அமைக்கப்பட்டு, அங்கு அவர்கள் இராணுவக் கட்டுப்பாட்டில், மனிதாபிமானமற்ற நிலையில் அடைக்கப் பட்டது போன்ற சிங்களர்களால் மேற்கொள்ளப்பட்ட தமிழி னத்திற்கெதிரான அராஜகங்கள் நாசிகள் யூதமக்களுக்குச் செய்த அட்டூழியங்களுக்கு இணையாக அமைவதை காணலாம்.

### இனஅழிப்புத் திட்டம்:

மார்க் லெவின் (Mark Levene) என்பவரின் வரைவிலக் கணத்தின்படி, இனப்படுகொலைத் திட்டத்திற்கும், இனஅழிப் புக்கும் வித்தியாசம் இல்லை. இனஅழிப்பு ஓர் ஒழுங்கான முறையில் காலவரையறைக்கு உட்படுத்தப்படாது நடத்தப் படலாம். இன அழிப்பின் வரைவிலக்கணம், அதனால், அந்த நேர எல்லைக்குள் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையில், அடங்கியிருக்கவில்லை.

சில நவீன நிபுணர்கள், திடீரெனப் பேரழிவை ஏற்படுத்தும் பலாத்காரம் முற்றாக அழிவை ஏற்படுத்தும் போதுதான் அவை இன அழிப்பு என வரைவிலக்கணம் கொடுக்க முனையலாம். ஆனால், இத்தகைய கோணத்தில் பார்க்கும்போது, இன அழிப்பிற்கு முன், ஓர் இனஅழிப்புத் திட்டம் நிறைவேற்றப் படுவதைக் காணலாம். இலங்கையில், சுதந்திரம் அடைந்த நாள் முதல், இனஅழிப்புத் திட்டம் தொடர்ச்சியாக நிறை வேற்றப்பட்டதை நாம் இதற்குமுன் எடுத்துக்காட்டியிருந்தோம்.

இலங்கையைப் பொறுத்தவரையில், 1948 முதல், இன அழிப்பு ஒரு திட்டமிட்ட வகையில் நடைபெற்று வந்தபோதி லும், அதன் பாதையில் நடைபெற்ற பெரும் எண்ணிக்கை யிலான மற்றைய நிகழ்வுகளுடன், சேர்த்து பெருமெடுப் பிலான பலாத்கார நிகழ்வுகள், அந்த இனத்தை அழிக்கும் முயற்சிகள் என்பதை வெளிப்படையாக எடுத்துக் காட்டு கின்றன. இந்தக் கொள்கை வரைவிலக்கணங்களில்,

(38ம் பக்கம் பார்க்க)